தினமணி

## தலையங்கம்: வீழ்ச்சிக்கு வழி!

First Published : 10 Apr 2012 12:55:36 AM IST

Last Updated : 11 Apr 2012 01:27:31 AM IST

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தினால் வேளாண் பணிகள் செய்வதற்கு விவசாயத் தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. ஆகவே, இத்திட்டத்தின் நடைமுறைகளை மாற்ற வேண்டும் என்று கோரி, பொதுநல வழக்குத் தொடுத்த பெரியசாமி (76) என்பவரின் மனுவை உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்துவிட்டது.

இத்திட்ட நடைமுறைகளில் முறைகேடு இருக்குமானால் மனுதாரர் இது குறித்துத் தொடர்புடைய அதிகாரிகளிடம் முறையிடலாம். மாறாக, மத்திய அரசின் திட்டத்தின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சில நேரங்களில் ஒரு பிரச்னையை எவ்வாறு எடுத்துச் சொல்வது என்று தெரியாத காரணத்தாலேயே காரியம் கெட்டுப்போவது உண்டு. அந்த ரகம்தான் இதுவும். பெரியசாமி இந்த மனுவில் விவசாயத் தொழிலாளர் தட்டுப்பாட்டை மட்டுமே முன்னிலைப்படுத்தியிருக்கலாம். இத்திட்டத்தில் முறைகேடுகள் குறித்து அவர் அதிகம் பேசியதால், இந்த முறைகேடுகளை அதிகாரிகளிடம் தெரிவியுங்கள் என்று நீதிபதிகள் கூறிவிட்டனர்.

பெரியசாமி குறிப்பிட்டிருப்பதைப்போல, கிராமப்புறங்களில் பண்ணைத் தொழிலாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. வழக்கமாகவே கிராமங்களில் வேலையாள் தட்டுப்பாடு பிரச்னை கடந்த இருபது ஆண்டுகளாக அதிகரித்து வருகின்றது. லாபகரமாக இல்லாததால் விளைநிலங்களின் பரப்பளவு குறைந்து வருவதும், பாசன வசதி இல்லாமல் விவசாயம் தடைபடுவதும் அதிகரித்துவிட்ட நிலையில் கிராம மக்கள் நகர்ப்புறங்களில் கட்டட வேலைகளுக்குச் செல்வது அதிகரித்துக்கொண்டே வருகிறது.

கேரளம் மற்றும் கர்நாடக மாநில எல்லைப் பகுதிகளில் உள்ள தமிழக கிராமங்களில் இந்தப் பிரச்னை மேலதிகமாக உள்ளது. இந்நிலையில், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டமும் சேர்ந்து கொண்டதில் விவசாயத் தொழிலாளர் தட்டுப்பாடு மிகமிக மோசமாகியிருப்பது உண்மை.

இதற்கு அடிப்படைக் காரணம், விவசாயப் பணிகள் காத்துக்கொண்டிருக்கும்போது அரசு அலுவலர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதுதான்.

இந்தத் திட்டத்தில் பணியாற்றும் யாருக்கும் எந்தவித வேலைப்பளு அல்லது குறிப்பிட்ட பணியை முடிக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. அலுவலர்களுக்கும் முடித்த பணிகளுக்கு பொறுப்பேற்பு கட்டாயமில்லை. இத்திட்டப் பணிகளுக்குத் தணிக்கை முறை வரும் என்று மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கூறியிருந்தாலும், இதுநாள்வரை தணிக்கை இல்லை என்பதே இத்திட்டத்தில் முறைகேடுகள் நடக்கக் காரணமாக இருக்கிறது.

குறைந்த வேலை, போதுமான ஊதியம் என்கிறபோது, விவசாயத் தொழிலாளியாக ஒரு நாள் முழுவதும் வேலை செய்ய வேண்டுமா என்று சோம்பல்கொண்டு விடுகின்றனர் கிராம மக்கள். கிராமங்களில் காணப்படும் உண்மை நிலவரம் இதுதான்.

இத்திட்டதை மத்திய அரசு தொடங்கியதன் நோக்கம், விவசாயப் பணிகள் இல்லாத நாள்களில் இந்தக் கிராம மக்கள் கையில் பணம் இல்லாமல் வறுமையில் வாடக்கூடாது என்பதுதான். விவசாயப் பணிகள் இல்லாத நாள்களில் மட்டுமே இந்த 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம் அமைய வேண்டும். அதுதான் அரசின் கொள்கையும், நோக்கமும்!

ஆனால், அரசு அதிகாரிகளின் மெத்தனமும், கிராம மக்கள் எளிய உழைப்பில் ஊதியம் காணலாம் என்கிற உந்துதலும், உள்ளூர் அரசியலும் சேர்ந்து இத்திட்டத்தைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கின்றன. விளைவு, நாளுக்கு நாள் விவசாயத் தொழிலாளர் கிடைப்பது அரிதாகிக்கொண்டே போகின்றது.

கரும்பு வெட்ட, நெல் அறுவடை செய்ய, பருத்தி எடுக்க என விவசாய வேலைகள் இருக்கும் நாள்களில், ஏன் இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் பெரியசாமியின் நியாயமான கேள்வி. நாங்கள் அதிகக் கூலி தரத் தயாராக இருக்கும்போது வேலை செய்யாமல் கூலி தருகிறோம் என்று அவர்களைத் திசைதிருப்புவது என்ன நியாயம் என்று கேட்கிறார் அவர்.

மத்திய அரசு நிகழ் நிதிநிலை அறிக்கையில், ரூ. 38,000 கோடியை இத்திட்டத்துக்காக ஒதுக்கியுள்ளது. இதில் தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கும் ஒதுக்கீடு ரூ. 5,000 கோடி. இத்திட்டத்தில் வேலை செய்வோருக்கு சம்பளம் பாதிதான் தரப்படுகிறது என்ற குற்றச்சாட்டு எழுந்தபின்னர், தற்போது வங்கிகள் மூலமாக இந்த நிதியை வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் பணியாற்றவுள்ள, முன்வந்துள்ள அனைவருக்கும் வங்கிக் கணக்குகள் தொடங்கும் பணியை தமிழக அரசு முடுக்கியுள்ளது. தமிழக சட்டப்பேரவையில் இரு நாள்களுக்கு முன்பு தெரிவிக்கப்பட்டதைப் போன்று, இதுவரை தமிழகத்தில் 94,12,948 பேருக்கு வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுவிட்டன. இது பதிவு செய்துள்ள விவசாயத் தொழிலாளர்களில் 82 விழுக்காடு.

தமிழ்நாட்டில் உள்ள 4,446 பஞ்சாயத்துகளிலும் இத்திட்டத்தின் கீழ் வரும் அனைவருக்கும் வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு, இவர்கள் அனைவருக்கும் 100 நாள் வேலை வாய்ப்பு வழங்குவதை யாரும் எதிர்க்கவில்லை. நெல்அறுவடை, கரும்புவெட்டு, பருத்தி எடுத்தல், கடலை பிடுங்குதல், ஏரோட்டம், களைப்பறிப்பு, உரம் தெளிப்பு என விவசாயப் பணிகள்

காத்துக்கிடக்கும்போது, இதற்கு வரக்கூடிய தொழிலாளர்களை ஏன் திசை திருப்புகிறீர்கள் என்பதுதான், பெரியசாமிக்கு மட்டுமல்ல, வேளாண்மை செய்யும் அனைவருக்கும் உள்ள நியாயமான கேள்வி.

நீதிமன்றம் உத்தரவிடவில்லை என்றாலும்கூட, தமிழக அரசு தன்னிச்சையாக இது பற்றிய ஆய்வை நடத்த முன்வர வேண்டும். இத்திட்டம் மேற்கொள்ளப்படும்போது, விவசாயத் தொழிலாளர் தட்டுப்பாட்டால் வேளாண் பணிகள் பாதிக்கப்படுகின்றதா, அதற்கு தமிழ்நாட்டில் எத்தகைய நடைமுறை சரியான தீர்வாக இருக்கும் என்பதை ஒரு குழு மூலம் ஆய்வு நடத்திப் பார்ப்பதில் தவறில்லை.

விவசாயிகள் வெறுத்துப்போய் விவசாயத்தைக் கைவிடுவதும், விளைநிலங்கள் வீடுகளாக மாறுவதும் வளர்ச்சியின் அறிகுறி அல்ல, வீழ்ச்சிக்கு வழி!

## ஏப்ரல் 12 ஆம் தேதி வெண்பன்றி வளர்ப்புப் பயிற்சி

First Published : 10 Apr 2012 12:09:08 PM IST

கரூர், ஏப். 9: கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஏப்ரல் 12 ஆம் தேதி வெண்பன்றி வளர்ப்புப் பயிற்சி நடைபெறுகிறது.

இதுகுறித்து மையத்தின் இணைப் பேராசிரியர் கே. செந்தில்வேல் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இந்த மையத்தில் வெண்பன்றி குறித்த பயிற்சி ஏப்ரல் 12 ஆம் தேதி காலை 10 மணிக்கு அளிக்கப்பட உள்ளது. வெண்பன்றி வளர்ப்பு, கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள் மற்றும் அவற்றைத் தடுக்கும் முறைகள், பண்ணைப் பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

மேலும், களப் பயிற்சியும் வழங்கப்பட உள்ளது.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் பயிற்சி மையத்திற்கு நேரடியாக வரலாம். பயிற்சி தொடர்பான விவரங்களை 04324- 294335 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## அழகு புல்தரை அமைத்தல் (லான் மேக்கிங்)

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2012,00:00 IST






**நிலம் தயார் செய்தல்:** புல்வெளி அமைக்க தெரிவு செய்யப்பட்ட நிலத்தை முதலில் 45செ.மீ. ஆழத்திற்கு நன்கு கொத்தி புழுதியாக்கி, அதிலுள்ள சிறு கற்கள், பெரிய மண் கட்டிகள், கோரைக் கிழங்கு, அருகம்புல்லின் கிழங்கு போன்றவற்றைச் சுத்தமாக பொறுக்கி எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். பின் மக்கிய எருவையோ, மாட்டுச்சாணத்தையோ ஒரு சதுரமீட்டருக்கு 2 கிலோ என்ற அளவில் இட்டு நிலப்பரப்பைச் சமப்படுத்த வேண்டும். சமப்படுத்தும்பொழுது மழைநீர் வடிவதற்காக 3மீ பரப்புக்கு 15 செ.மீட்டர் சரிவு கொடுத்து சமப்படுத்துதல் நல்லது. இவ்வாறு தயார் செய்த நிலத்திற்கு இருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு செய்தால் மண் நன்கு படிந்து அதில் உள்ள களைகள் முளைக்கும். அவற்றை எடுத்துவிட்டு மீண்டும் கொத்திச் சமப்படுத்த வேண்டும்.

**அழகு புல் வகைகள்:** புல் தரை அமைப்பதற்கு அருகம் புல், செயின்ட் அகஸ்டியன் புல், உப்பருகு,

நீலப்புல், சங்கிலிப்புல், சுப்பான் புல், மணிலாப்புல், கொரியன் புல், ஐதராபாத் புல் மற்றும் குட்டை பெர்முடா ஆகிய வகைகளை உபயோகப்படுத்தலாம். ஒவ்வொரு வகைப் புல்லினத்திற்கும் வெவ்வேறு தனித்தன்மையும் பயன்பாடும் உண்டு. அத்தகைய சிறப்புத் தன்மைகளை இப்பொழுது பார்க்கலாம்.

**அருகம்புல் வகைகள்**: இவ்வகை, புல்தரை அமைக்க பெருவாரியாகப் பயன்படுகிறது. சைனோடான் இன்டர்மீடியஸ் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இப்புல் வகையானது சுமாரான மிருதுத் தன்மையுடன் காணப்படும். இவை வறட்சி மற்றும் அதிக சூரிய ஒளி விழும் பகுதிகளுக்கு மிகவும் உகந்தவை.

**அகஸ்டியன் புல்**: இவை மிகவும் சொரசொரப்பான தன்மையைப் பெற்றிருப்பதால் இவற்றை "எருமைப்புல்' என்றும் அழைப்பார்கள். ஆங்கிலத்தில் இப்புல்லானது ஸ்டினோடெப்ரம் செக்கன்டேட்டம் எனப்படுகிறது. இவை நிழலான பகுதிகள் மற்றும் தண்ணீர் அதிகமாக கிடைக்கும் பகுதிகளில் புல்தரை அமைக்க உகந்தவை.

**விதை:** நன்கு தயார் செய்த நிலத்தில் ஒரு பங்கு விதைக்கு ஐந்து பங்கு மணல் கலந்து 2செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். ஒரு சதுர மீட்டருக்கு 2.5 கிராம் விதை தேவைப்படும். விதைக்கும் முன் மண்ணை முள் கொத்தால் நன்கு கிளறிவிட்டு விதைத்தபின் விதைகளைத் குளத்துமண் கொண்டு மூடவேண்டும். ஒரு மீட்டருக்கு 10 கிராம் லிண்டேன் மருந்து தூவி எறும்பு வராமல் தடுக்க வேண்டும். பின் பூவாளி கொண்டு தண்ணீர் தெளிக்க வேண்டும். விதை முளைக்க ஐந்து வாரம் ஆகும். புல் 5 செ.மீ. உயரம் வளர்ந்தபிறகு அறுத்துவிட வேண்டும். இந்த நிலையில் புல் தரைக்கருவி கொண்டு கத்தரிக்கக்கூடாது. பின் உருளை கொண்டு நன்கு உருட்டிவிட்டால் புல் நன்றாக படியும்.

தொடர்புக்கு: பேராசிரியர் கண்ணன், 94432 54038.-கே.சத்தியபிரபா, உடுமலை.

## நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2012,00:00 IST

**புரோடீனியா புழு:** புழுக்கள் செடியின் குருத்து மற்றும் இலைகளை கடித்து தின்பதால் பயிர்கள் ஆடு, மாடுகள் மேய்ந்ததுபோல் காணப்படும். இதன் அந்துப்பூச்சி உருண்டை வடிவ முட்டைகளை குவியலாக இலையின் மேற்பரப்பில் இட்டு அதை கம்பளி ரோமங்களால் மூடி வைக்கும். இளம் புழுக்கள் பச்சை நிறமாகவும் பின்னர் கருப்புப் புள்ளிகளுடன் நிறமாற்றம் பெறும். இப்புழுவின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் உடல்நிறம் மாறிவரும். பழுப்பு நிற அந்துப்பூச்சியின் முன் இறக்கைகளில் கருப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற குறுக்கு கோடுகள் இருக்கும். பின் இறக்கைகள் வெண்மை நிறமாக இருக்கும்.

**அசுவினி**: வளர்ந்த பூச்சிகள் சிவப்பு கலந்த பழுப்பு நிறமாக இருக்கும். இலைகள் பச்சைப் புள்ளிகளாகவும், பச்சையமின்றியும் காட்சியளிக்கும். செடியின் கொழுந்துப்பகுதி சாய்ந்தும் வளர்ச்சி குன்றியும் காணப்படும்.

**இலைப்பேன்கள்:** இளங்குஞ்சுகளும் வளர்ந்த பூச்சிகளும் சாறை உறிஞ்சி சேதத்தை உண்டுபண்ணும். முற்றிய இலையின் மேற்பரப்பில் வெள்ளை புள்ளிகளாக காட்சியளிக்கும். இலையின் மேற்பரப்பில் வரிக் கோடுகளில் பூச்சியின் கருப்பு நிறக் கழிவுகள் இருக்கும். தளிர் இலைகளின் மேற்பரப்பு ஒழுங்கற்ற மஞ்சள் கலந்த பச்சைநிற தொகுதிகளாகவும், அடிப்பாகம் பழுப்புநிற கோடுகளாகவும் வெளிறியும் காணப்படும். இளங்குஞ்சுகள் மஞ்சள் நிறமாகவும் வளர்ந்த பூச்சிகள் கருப்பு நிறமாகவும் இருக்கும்.

**தத்துப்பூச்சிகள்**: தத்துப்பூச்சிகள் பச்சை நிறத்தில் காணப்படும். இளம் குஞ்சுகளும் வளர்ந்த பூச்சிகளும் இலையின் அடிப்பாகத்தில் அமர்ந்து சாறை உறிஞ்சும். தாக்கப்பட்ட இலை யின் நுனி பகுதிகள் மஞ்சள் நிறத்துடன் வளர்ச்சி குன்றி காணப்படும்.

**பூச்சிக்கட்டுப்பாடு**: முன்பட்ட பருவத்தில் சாகுபடி செய்வதன் மூலம் சுருள் பூச்சியின் தாக்கத்தைத் தவிர்க்கலாம். கோடை மழையைத் தொடர்ந்து வயலை உழவு செய்து கூட்டுப்புழுவை வெளிக்கொணர்ந்து சேகரித்து அழிக்கலாம். மழைக்குப் பின்னே தொடர்ந்து மூன்று நாட்க ளுக்குக் குறையாமல் விளக்குப் பொறிகள் வைத்தல் மற்றும் சொக்கப்பான் கொளுத்துதல் மூலம் தாய் அந்துப்பூச்சிகளை எளிதாக கவர்ந்து அழிக்கலாம்.

ஊடுபயிராக கம்பு பயிரை 1:4 என்ற விகிதத்தில் பயிரிடுவதால் சுருள் பூச்சியின் தாக்குதலை குறைக்கலாம். ஆமணக்குப்பயிரை நிலக்கடலை விதைத்த வயலைச் சுற்றியுள்ள பகுதி யில் பொறிப்பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ பயிரிடுவதன் மூலம் புரோடீனியா புழுக்களையும் இனக் கவர்ச்சி பொறிகளை ஒரு ஏக்கருக்கு 5 வீதம் வைத்து ஆண் அந்துப்பூச்சிகளையும் கவர்ந்து அழிக்கலாம்.

உயிரியல் முறையில் எக்டருக்கு 250 வைரஸ் நச்சுயிரி தாக்கிய புழுக்களில்இருந்து கிடைக்கும் என்பிவி நச்சுயிரி திரவத்துடன் சென்டோவிட் அல்லது டீப்பால் அல்லது டிரைட்டான் அல்லது காதி சோப்புக்கரைசல் போன்ற நனைப்பான்கள் 250 மி.லி.யுடன் 2.5 கிலோ வெல்லம் மற்றும் 500 லிட்டர் நீருடன் கலந்து மாலை வேளைகளில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணியை ஒரு ஏக்கருக்கு 20,000 விகிதத்தில் பத்து நாட்கள் இடைவெளியில் இரண்டுமுறை வெளியிடவும். கிரைசோபா என்ற இரை விழுங்கியை ஒரு ஏக்கருக்கு 2000 வீதம் வெளியிடலாம். இயற்கை எதிரிகளான ஒட்டுண்ணி, இரை விழுங்கிகள், சிலந்திகள் போன்றவை வளர்த்துவிடுவது ஆகியவற்றை கையாளலாம்.

5 சதம் வேப்ப விதைச்சாறுடன் ஒட்டும் திரவம் அல்லது காதி சோப்புக்கரைசல் கலந்து விதைத்த 15 மற்றும் 25வது நாட்களில் தெளித்து பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். (ஒரு ஏக்கருக்கு வேப்ப விதை 10 கிலோ - 200 லி தண்ணீர்). கார்பரில் 10 சதம் தூள் அல்லது பெனிட்ரோதியான் 2 சதம்

தூள் மருந்தை ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவி சுருள் பூச்சியை கட்டுப் படுத்தலாம். அல்லது திரவ மருந்து களை ஒரு ஏக்கருக்கு டைகுளோர்வாஸ் 250 மிலி, மானோகுரோட்டோபாஸ், பாசலோன், குயினால்பாஸ், பென்தோயேட் 300 மிலி, இமிடாகுளோபிரிட் 60 மி.லி. போன்ற மருந்துகள் தெளித்தும் கட்டுப்படுத்தலாம். புரோடீனியா புழுக்களை கட்டுப்படுத்த பெனிட்ரோதியான் 300மிலி, குயினால்பாஸ் 300 மிலி, பென்தியான் 200மிலி, பென்தோ யேட் 500மிலி, டைகுளோர்வாஸ் 300மிலி, புரோபனோபாஸ் 800 மிலி, வேப்ப எண்ணெய் கரைசல் 2 சதம் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

புழுக்களின் தாக்குதல் அதிக அளவில் இருப்பின் குயினால்பாஸ் 1.5 சத தூளை ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வீதம் காலை பனிப்பதத்தில் தூவி கட்டுப்படுத்த வேண்டும். அல்லது மானோகுரோட்டோபாஸ் அல்லது குயினால்பாஸ் அல்லது பென்தோயேட் 300மி மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப் படுத்தலாம். புரோடீனியா புழுவினை கட்டுப்படுத்த எக்டருக்கு 12.5 கிலோ அரிசித்தவிடு, வெல்லம் 2.5 கிலோ, நனையும் கார்பரில் 1.25 கிலோவினை உருண்டை பிடிக்கின்ற பக்குவம் வரை தண்ணீர் கலந்து பிடித்த உருண்டைகளை செடியின் அருகிலும் வரப்பின் ஓரங்களிலும் மாலை வேளைகளில் வைத்து புழுக்களைக் கவர்ந்து அழிக்கலாம். இமிடாகுளோபிரிட் என்ற மருந்தினை ஒரு ஏக்கருக்கு 40 மிலி வீதம் தெளித்து சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.ஜட்டா கவிதா, சி.விஜயராகவன் மற்றும் ப.பாலசுப்பிரமணியன்மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு-630 102.

## நவீன தொழில்நுட்பம்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2012,00:00 IST

**சாம்பல் சத்தைக் கரைக்கும் நுண்ணுயிர்கள்**: சாம்பல்சத்தின் தாதுக் களைக் கரைக்கவல்ல நுண்ணுயிரி அஸ்பர்ஜில்லஸ் ரைஜர் என்ற பூஞ்சனம். களிமண் இம்மிகளிலிருந்து பொட்டாசியத்தை கரைக்க வல்லது. பாக்டீரியாக்கள் "புரோடியஸ் மிராபிலிஸ், பேசில்லஸ் எக்ஸ்ட்ராடுவன்ஸ்', பேசில்லஸ் கால்டோ லைடிகஸ், பேசில்லஸ் சாகுலன்ஸ், பேசில்லஸ் மியூசிலாஜினோசஸ் வார்.சிலிசியஸ் ஆகிய பாக்டீரியாக்கள் முக்கியமானவை. இவை அனைத்தும் மண்ணில் காணப்படுபவையே. மண்ணில் 13 வகையான கனிமச்சத்துக்கள் உள்ளன. அவைகள் பேரூட்டச்சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்து என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. தழை, மணி, சாம்பல் போன்ற பேரூட்டச்சத்துக்கள் மிக அதிக அளவில் பயிர்களின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. காப்பர், போரான், இரும்பு போன்றவை மிக குறைந்த அளவில் தேவைப் படுகின்றன.

நுண்ணுயிர் உரம் நன்மை தரும் நுண்ணுயிர்களைப் பயன்படுத்தி பெறப்படும் ஒரு வகை உரமாகும். இந்த உரம் பயிர்களின் வேர், விதை, மண் ஆகிய அனைத்தின் செயல்பாட்டை

அதிகரிக்கச் செய்து ஊட்டச்சத்துக்கள் சரியான அளவில் கிடைக்க வழிசெய்கின்றன. வெவ்வேறு வகையான நுண்ணுயிர் களை குறிப்பாக நைட்ரஜனை நிலைப் படுத்தும் பாக்டீரியாக்கள் அசிட்டோபாக்டர், அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்பரசைக் கரைக்கும் பாஸ்போபாக்டீரியா மற்றும் பொட்டாசை கரைத்துக் கொடுக்கும் பேசில்லஸ் மியூசிரோஜினஸ் ஆகியவை பேரூட்டச்சத்துக்களை பயிர்களுக்கு கொடுக்கும் நுண்ணுயிர் உரங்களாகும்.

**பொட்டாஷ் மொபிலைசர் உயிர் உரம்**: பொட்டாசியம் கனிமங்களில் சில பாக்டீரியம் வாழ்வது கண்டறியப் பட்டது. இந்த கனிமங்களில் வாழும் பாக்டீரியாவில் ஒன்று பொட்டாசி யத்தை நன்கு கரைக்கவல்லது எனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

"பிரசூரியா ஆரன்டியா' எனப்படும் இந்த பாக்டீரியம் கரும்பிற்கு உயிர் உரமாகப் பயன்படுத்தப்படும் குளூகனோ அசிட்டோபாக்டர் டை அசோடிராபிக்ஸ் பாக்டீரியத்திற்கு மிக நெருங்கிய வகையாகும். பிரசூரியா ஆரன்டியா பாக்டீரியம் சாம்பல்சத்தை கரைத்துத் தருவதையும் பல பயிர்களில் மகசூல் கூட்டுவதையும் வயல்வெளி ஆய்வுகள் மூலம் சாம்பல் சத்தின் உபயோகத்தில் சரிபாதியையோ அல்லது முழுவதையுமோ தவிர்த்துவிடலாம்.

**ஏற்ற பயிர்கள்**: பொட்டாஷ் மொபிலைசரை அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். நெல், கரும்பு, வாழை, கிழங்கு வகைகள், மஞ்சள், தானியப்பயிர்கள், காய்கறிப்பயிர்கள், மலைப்பிரதேசப் பயிர்கள் அனைத்திற்கும் இடலாம். குறிப்பாக சாம்பல்சத்து அதிகம் தேவைப்படும் கரும்பு, வாழை, மரவள்ளி போன்ற பயிர்களில் இதன் செயல்பாட்டினால் மிகுந்த நன்மை உண்டு. பொட்டாஷ் மொபிலைசரை பிற உயிர் உரங்களான அசோஸ் பைரில்லம், அசட்டோபாக்டர், குளூகனோ அசிட்டோபாக்டர், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றுடன் சேர்த்து பயன்படுத்தலாம். ஒன்றோடொன்று கலந்து இடுவதால் பொட்டாஷ் மொபிலைசரும் பாதிக்கப்படுவது இல்லை. பிற உயிர் உரங்களுக்கும் எந்த பாதிப்பும் கிடையாது. சாம்பல் சத்தைக் கரைக்கும் திறன் கொண்ட நுண்ணுயிர் உரம் இயன்றளவில் ஆராய்ச்சி நிலையில் உள்ளது. இந்த நுண்ணுயிர் உரம் மேலும் சில வயல்வெளி ஆராய்ச்சி களை மேற்கொண்ட பிறகு வணிக ரீதியாக வெளியிடப்படும்.

**தகவல்:** முனைவர் ரா.பூரணியம்மாள், செ. கனிமொழி, முனைவர் எச்.கோபால், வேளாண் நுண்ணுயிரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-641 003.-

டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**மாற்று பயிராக மக்காச்சோளம் சாகுபடி : மகசூல் அதிகரிப்பால் விவசாயிகள் குஷி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2012,00:21 IST

ஸ்ரீபெரும்புதூர் தாலுகா விவசாயிகள், மாற்றுப் பயிராக மக்காச்சோளம் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தஞ்சைக்கு அடுத்து விவசாயத்தில் சிறந்து விளங்குவது, காஞ்சிபுரம் மாவட்டம். இம்மாவட்ட

விவசாயிகள் அதிக அளவில் நெல் பயிரிடுகின்றனர். அதற்கு அடுத்து கரும்பு பயிரிடுகின்றனர். நிலக்கடலை, பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் போன்றவையும் பயிரிடப்படுகிறது.

மகசூல் குறைவு

ஒரே பயிரை தொடர்ந்து பயிரிடுவதால், மண் வளம் குறைந்து, மகசூல் பாதிக்கிறது. வருமானம் குறைகிறது. இதைத் தவிர்க்க, மாற்றுப் பயிர்களை பயிரிடும்படி, வேளாண் அதிகாரிகள் அறிவுரை வழங்கி வருகின்றனர்.

பட்டுமுடையார் குப்பம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் உள்ளது. இப்பகுதியில் மண்வளம், நீர்வளம், விவசாயத்திற்கேற்றவாறு அமைந்துள்ளது.

இங்குள்ள மக்களும் வழக்கம்போல், நெல் பயிரிட்டு வந்தனர். அவர்களை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் குருராஜ்சிங் தலைமையில், வேளாண் அலுவலர்கள் சந்தித்தனர். மாற்றுப் பயிர் சாகுபடியால் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைத்தனர்.

விவசாயிகள் ஆர்வம்

வேளாண் அலுவலர்கள் கூறியதை ஏற்று, பட்டுமுடையார்குப்பம் விவசாயிகள், மாற்றுப் பயிர் சாகுபடி செய்ய முன்வந்தனர். மகிழ்ச்சி அடைந்த வேளாண் அலுவலர்கள், அவர்களை அதிக மகசூல் கிடைக்கும், மக்காச்சோளம் பயிரிடும்படி, ஆலோசனை வழங்கினர். அவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

30 ஏக்கரில் சாகுபடி

காட்டுப்பாக்கம் விவசாய அறிவியல் ஆய்வு மையம் தலைவர் குமாரவேல், உதவி பேராசிரியர் முருகன், ஸ்ரீபெரும்புதூர் வேளாண் உதவி இயக்குனர் கலைமணி, வேளாண் அலுவலர் ஜோசப்ஹெக்டர் ஆகியோர், மக்காச்சோளம் பயிரிடுவது எப்படி என, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

பயிற்சி முடித்த விவசாயிகளுக்கு, விதை கிராம திட்டத்தின் கீழ், வேளாண்மைத் துறை சார்பில், 50 சதவீத மானிய விலையில், மக்காச்சோள விதைகள் வழங்கப்பட்டது. விவசாயிகள், 30 ஏக்கர் பரப்பளவில், மக்காச்சோளம் சாகுபடி செய்தனர்.

தற்போது பயிர் நன்கு வளர்ந்து, கதிர் வரத் துவங்கி உள்ளது. இப்பயிர்களை, தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ், அடையாறு மற்றும் கூவம் வடிநிலப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், நேரில் வந்து பார்த்து செல்கின்றனர்.

இதுகுறித்து, அக்கிராமத்தைச் சேர்ந்த மனோகரன் கூறுகையில், ""தொடர்ந்து நெல் பயிரிட்டதால் மகசூல் குறைந்துவிட்டது. மண்ணில் சத்து குறைந்துவிட்டது. போதிய வருமானம் இல்லாமல் அவதிப்பட்டு வந்தோம்.

வேளாண்மைத் துறை உதவி இயக்குனர் கலைமணி மற்றும் அலுவலர்கள், மாற்றுப் பயிராக மக்காச்சோளம் பயிரிடும்படி ஊக்கப்படுத்தினர்.

தற்போது, சுற்றுவட்டார கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளும் ஆர்வமாக பார்த்துச் செல்கின்றனர்," என்றார்.

## கொள்முதல் நிலையத்தில் தேங்காய் வாங்க மறுப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2012,03:38 IST

ஈரோடு: அரசு அறிவித்த தேங்காய் கொள்முதல் திட்டத்தில், அனைத்து விவசாயிகளும் பயன்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
தமிழக அரசு கடந்த 40 நாட்களுக்கு முன் தமிழ்நாடு தென்னை வித்து வாரியம் மூலம், அனைத்து மாவட்டங்களிலும் கொள்முதல் நிலையம் அமைத்து, தேங்காய் கொள்முதல் செய்யும் என அறிவித்தது. இதன்படி, ஈரோடு, அவல்பூந்துறையில் உள்ள கூட்டுறவு சங்க வளாகத்தில், தென்னை கொள்முதல் நிலையம் துவங்கப்பட்டது. முதல் தர பருப்பு கிலோ, 51 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. வெளி மார்க்கெட்டில், 40 ரூபாய்க்கு கொள்முதலாகிறது. ஆனால், கடந்தாண்டு, 65 முதல், 70 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

கடந்தாண்டைவிட குறைந்த தொகை என்றாலும், அரசிடம் வழங்கினால், குறித்த நேரத்தில் தொகை கிடைத்துவிடும், என்பதால், தேங்காய் விற்க விவசாயிகள் ஆர்வம் காட்டினர்.
தேங்காய் கொள்முதல் செய்ய "விவசாயி' என்பதற்கான அடையாள அட்டை பெற்று வரும்படி, கொள்முதல் நிலையம் பணித்தது. அந்தந்த பகுதி வி.ஏ.ஓ.,விடம், தங்கள் நிலத்தில் உள்ள தென்னை மரம் தற்போது பூத்து, காய்த்துள்ள விபரங்களை சான்றாக பெற்று, வேளாண் துறையிடம் அதை வழங்கி, அடையாள அட்டையாக வழங்கும்படி கேட்டனர். விவசாயிகள் பலரிடமும் அட்டை இல்லாததால், தேங்காய் விற்பனை செய்ய முடியவில்லை.

இதுபற்றி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன சபை தலைவர் தளபதி கூறியதாவது:
விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்க, அரசிடம் இருந்து எந்த உத்தரவும் வரவில்லை. கடந்த 1998 -2000ல் தென்னை வாரியம் மூலம் வழங்கப்பட்ட அட்டை இருந்தால், அதில், புதிய சீல் வைத்து தருகிறோம், எனக்கூறி, அடையாள அட்டை வழங்க அதிகாரிகள் மறுக்கின்றனர். விவசாயிகளிடம் 1998ல் இருந்த தென்னை மரங்கள் எண்ணிக்கை உயர்ந்து அல்லது இல்லாமல் இருக்கலாம். புதிய தென்னை விவசாயிகள் உருவாகி இருக்கலாம். அவர்களிடம் அடையாள அட்டை எப்படி இருக்கும் என்பதை கருத்தில் கொள்ளாமல், அற்ப காரணங்களுக்காக விவசாயிகளிடம் கொள்முதல் செய்யாமல் தவிர்க்கின்றனர்.

ஆனால், அவ்வப்போது தேங்காய் வியாபாரிகளிடம் இருந்து கொள்முதல் செய்து, கணக்கு காட்டி வருகின்றனர். ஆண்டு இறுதியில், பெருந்தொகை மானியமாக வழங்கப்பட்டதாக, விவசாயிகள் பயனடைந்ததாக பட்டியலை வெளியிட்டு, விவசாயிகளை அரசு ஏமாற்றும். எனவே, உண்மையான விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். அவல்பூந்துறை போல, கோபி பகுதியிலும் கூடுதலாக தேங்காய் கொள்முதல் நிலையம் திறக்கப்பட வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.வேளாண் துறை அதிகாரிகள், ""நாங்களாக அட்டை வழங்க இயலாது. வாரிய அட்டை வைத்துள்ள விவசாயிகள் தேங்காயை விற்பனை செய்கின்றனர்," என்றனர்.
அரசின் அறிவிப்புகளுக்கு செயல்வடிவம் கொடுக்கவும், உண்மையான விவசாயிகள் பயன் பெறவும், விதிகளை எளிமையாக்க வேண்டுமென, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## தோட்டங்களில் தேயிலை வாரிய அதிகாரிகள் ஆய்வு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2012,03:29 IST

கருத்தை பதிவு செய்ய

குன்னூர் : ""தும்மனட்டி கிராமத்தில் ஆலங்கட்டி மழையால் 300 ஏக்கர் தேயிலை தோட்டம் நாசமடைந்துள்ளது," என தேயிலை வாரிய அதிகாரி தெரிவித்தார்.
குன்னூர் தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறுகையில், ""கடந்த வாரம் ஊட்டியில் பெய்த கனமழையில் தும்மனட்டி, கெந்தொரை, கப்பச்சி உட்பட இடங்களில் பெரியளவிலான ஆலங்கட்டி மழை பெய்தது. இதில், அங்கிருந்த சுமார் 300 ஏக்கர் தேயிலைதோட்டம் நாசமானது; 1,000 விவசாயிகள் பாதித்துள்ளனர். விவசாயிகள், நஷ்ட ஈடு கேட்டதை தொடர்ந்து, தோட்டங்களில் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. ஆய்வறிக்கை மத்திய அரசின் கவனத்துக்கு அனுப்பி வைக்கப்படும். இதற்கு பின் மத்திய அரசில் இருந்து வரும் தகவல்களின் அடிப்படையில் இப்பகுதி விவசாயிகளுக்கு தேவையான உதவி செய்யப்படும்," என்றார்.

## இலவசமாக "மரத்தோட்டங்கள்' அமைத்து தர வனத்துறை திட்டம்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2012,00:09 IST

கம்பம் : தமிழ்நாடு பல்லுயிர் பரவல் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம் என்ற பெயரில் வனத்துறை திட்டம் ஒன்றை தயாரித்து, செயல்படுத்த துவங்கியுள்ளது.
இந்த திட்டத்தின்படி, வனப்பகுதிகளுக்கு வெளியே சிறு மற்றும் குறு விவசாயிகள்,

பெருவிவசாயிகள் தங்களின் நிலங்களில் மரங்கள் வளர்க்க இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது.

குறு விவசாயிகளுக்கு 2.5 ஏக்கர், சிறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர், பெரு விவசாயிகள் அதிகபட்சமாக 12.5 ஏக்கர் வரை பயன்பெறலாம். 5 ஆண்டுகள் வரம்பிற்குள் அறுவடை செய்யும் மரவகைகள் 30 சதவீத பரப்பிலும், நீண்ட காலம் வளரக்கூடிய பெருமர வகைகள் 70 சதவீத பரப்பிலும் நடவு செய்யப்படும்.

பெரு மரங்கள் மற்றும் குறுகிய கால அறுவடை மரங்கள் என எதுவாக இருந்தாலும், ஒரே வகை மரங்களை நடவு செய்யக் கூடாது.

அதே சமயம் தங்களின் நிலத்தில் மரங்களை நடவு செய்ய விருப்பமில்லாத விவசாயிகளுக்கு இலவசமாக 50 மரக்கன்றுகளும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 200 மரக்கன்றுகளும் வழங்கப்படும்.

ஒரு ஏக்கருக்கு குறுகிய கால மரவகைகள் 4 ஆயிரம் மரக்கன்றுகளும், பெருவகை மரக்கன்றுகள் 200 ம் வழங்கப்படும். மரக்கன்றுகள் நடவு செய்த விவசாயிகளுக்கு 3 வது ஆண்டில், மரங்களின் வளர்ச்சியை பொறுத்து ஊக்கத் தொகை வழங்கப்படும்.

ரேஞ்சர் குமரேசன் கூறுகையில், " பசுமை பரப்பை அதிகரிக்கும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சவுக்கு, மலைவேம்பு, தைலமரம், மூங்கில் போன்ற குறுகிய கால மரக்கன்றுகளும், தேக்கு, சந்தனம், கடுக்காய், தான்றிக்காய், பலா, பூவரசு, வாகை, வேங்கை, குமிழ், செஞ்சந்தனம் போன்ற நீண்டகாலம் வளரக்கூடிய மரக்கன்றுகளும் வழங்கப்படும். தனியார் பட்டா நிலங்களில் "மரத்தோட்டங்கள்' உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்' என்றார்.

## பத்து நறுமண பொருள் பூங்கா : மத்திய அரசு முடிவு

ஏப்ரல் 10,2012,23:54



புதுடில்லி: -நறுமணப் பொருள்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், நடப்பு 2012ம் ஆண்டில், 10 நறுமணப் பொருள் பூங்காக்களை திறக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, இந்திய நறுமணப் பொருள் வாரியம், 167 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.ஜோத்பூரில் நறுமணப் பொருள் பூங்கா அமைப்பதற்கான தொடக்க விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா கூறியதாவது: நாடு முழுவதும் குளிர்பதன கிடங்குகள் அமைப்பது மற்றும் அன்னிய நேரடி முதலீட்டுடன் கூடிய தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றால் இத்துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நல்ல பலனை அடைய முடியும் இவ்வாறு ஆனந்த் Œர்மா தெரிவித்தார்.எண்ணூர் துறைமுகம், மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தலைமையிலான கப்பல் போக்குவரத்து துறையின் நேரடி கண்காணிப்பின் கீழ் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

தினகரன்

## இலவச கறவை மாடுகள் மூலம் தினமும் 10 லிட்டர் பால் உற்பத்தி செய்தால் பரிசு கலெக்டர் அறிவிப்பு

பதிவு செய்த நேரம்:2012-04-10 12:12:42

வேலூர்:இலவச கறவை மாடுகள் மூலம் தினமும் 10 லிட்டர் பால் உற்பத்தி செய்பவர்களுக்கு பரிசு மற்றும் 60 கிலோ கலப்பு மாட்டுத்தீவனம் வழங்கப்படும் என்று ஆய்வுக்கூட்டத்தில் கலெக்டர் கூறினார்.

பால் கொள்முதல் மற்றும் இலவச கறவை மாடுகள் கறக்கும் பால் உற்பத்தியை பெருக்குதல் குறித்த ஆய்வுக்கூட்டம் வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.

கூட்டத்தில் கலெக்டர் அஜய்யாதவ் தலைமை தாங்கி பேசியதாவது:

கிராமப்புற ஏழை, எளிய மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்காக முதல்வர் கொண்டு வந்துள்ள இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் மாடுகள் பெற்றவர்கள் பால் உற்பத்தியை பெருக்கி தங்கள் வாழக்கையை முன்னேற்றலாம்.

இதற்காக கறவை மாடுகள் பெற்ற பயனாளிகளை ஊக்குவிக்கும் வகையில், தினமும் 10 லிட்டர் வீதம் 15 நாட்களுக்கு 150 லிட்டர் பால் உற்பத்தி செய்பவர்களுக்கு சிறப்பு பரிசுகள் மற்றும் 60 கிலோ கலப்பு மாட்டுத்தீவனம் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த சிறப்பு பரிசை பயனாளியின் வீட்டுக்கு கலெக்டரே நேரில் சென்று வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் ஆவின் பொதுமேலாளர் முருகன், உதவிபொதுமேலாளர் கணேஷ், கால்நடை உதவி இயக்குனர் மனோகரன், ஊராட்சிகள் உதவி இயக்குனர் மேனகா, கண்காணிப்பாளர் இமயவரம்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

*நடப்பு 2012–13–ஆம் நிதி ஆண்டில் மாம்பழங்கள் ஏற்றுமதி 80,000 டன்னை எட்டும்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு.புதுடெல்லி*

*நடப்பு 2012–13–ஆம் நிதி ஆண்டில் மாம்பழங்கள் ஏற்றுமதி 80,000 டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2011–12–ஆம் நிதி ஆண்டில் மாம்பழ ஏற்றுமதி 46,500 டன் என்ற அளவில் மிகவும் குறைந்திருப்பதாக முதல் கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.*

*ஏற்றுமதி தரம்*

*ஏற்றுமதி தரம் வாய்ந்த மாம்பழங்கள் கிடைப்பது என்பது பருவநிலையை சார்ந்து உள்ளது. பருவநிலை நன்றாக இருந்து, சப்ளை போதுமான அளவு இருந்தால் நடப்பு நிதி ஆண்டில் மாம்பழ ஏற்றுமதி 80,000 டன்னாக உயரும் என வேளாண் மற்றும் பதப்படுத்திய உணவு பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபெடா) தெரிவித்துள்ளது.*

*வர்த்தகர்கள் ஏற்கனவே மாம்பழ ஏற்றுமதியை தொடங்கி விட்டனர். தற்போது, அல்போன்சா மற்றும் கேசார் வகை மாம்பழங்கள் ஏற்றுமதி விறுவிறுப்புடன் நடைபெற்று வருவதாக தெரிகிறது. பொதுவாக ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில் மூன்றாவது வாரத்தில் இருந்து மே மாதம் முடிய ஏற்றுமதி விறுவிறுப்பாக இருக்கும். வங்காளதேசம், நேபாளம், மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளுக்கு நம் நாட்டிலிருந்து*

மாம்பழங்கள் ஏற்றுமதியாகின்றன.

இரண்டாவது முறையாக நடப்பு ஆண்டிலும் சில வர்த்தகர்கள் ஆஸ்திரேலியாவிற்கு மாம்பழ ஏற்றுமதியை மேற்கொள்ள உள்ளதாகவும், இதனால் ஏற்றுமதி அளவு கணிசமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் அபெடா தெரிவித்துள்ளது. மழைக்காலத்தில் உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் சில தென் மாநிலங்களிலிருந்து சந்தைகளுக்கு மாம்பழங்கள் வருகின்றன. ஆனால், மழை காரணமாக பழங்களின் தரம் பாதிப்புக்குள்ளாவதாக அபெடா உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

15 லட்சம் டன்

சுவை காரணமாக அல்போன்சா, கேசார் ரக மாம்பழங்களுக்கு உள்நாட்டிலும் அமோக வரவேற்பு உள்ளது. இது சில நேரங்களில் ஏற்றுமதியை கட்டுப்படுத்துகிறது. கடந்த சில ஆண்டுகளாக நம் நாட்டில் மாம்பழங்கள் விளைச்சல் ஆண்டுக்கு 15 லட்சம் டன் என்ற அளவில் இருந்து வருகிறது.

## ஏப்ரல் 1–ந் தேதி நிலவரப்படி உணவு தானியங்கள் கையிருப்பு 5.34 கோடி டன்னாக உயர்ந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி

ஏப்ரல் 1–ந் தேதி நிலவரப்படி உணவு தானியங்கள் கையிருப்பு 5.34 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே நாளில் 4.43 கோடி டன்னாக இருந்தது.

கோதுமை–அரிசி

கோதுமை கையிருப்பு மட்டும் 1.54 கோடி டன்னிலிருந்து 2 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இதே போன்று அரிசி கையிருப்பு 2.88 கோடி டன்னிலிருந்து 3.34 கோடி டன்னாக அதிகரித்துள்ளது என இந்திய உணவுக் கழகம் தெரிவித்துள்ளது. அரசு விதிமுறைகளின்படி ஏப்ரல் 1–ந் தேதியன்று அரிசி, கோதுமை கையிருப்பு, ஒட்டுமொத்த அளவில் 2.12 கோடி டன்னாக இருக்க வேண்டும். ஆனால் கையிருப்பு இரண்டு மடங்கிற்கு மேல் அதிகமாக

உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய உணவுக் கழகம் மத்திய அரசு சார்பில் நெல், கோதுமையை கொள்முதல் செய்து வருகிறது. இந்நிறுவனம் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உணவு தானியங்கள் கையிருப்பை அதிகபட்ச அளவிலேயே நிலைநிறுத்தி வருகிறது.

கடந்த சில ஆண்டுகளாக நெல், கோதுமை உற்பத்தி அதிகரித்து வருவதால் கையிருப்பும் அதிகரித்து வருகிறது. நடப்பு பருவத்திலும் கையிருப்பு கணிசமாக அதிகரிக்க உள்ளது. ஏனென்றால் இந்திய உணவு கழகம் 3.50 கோடி டன் நெல் மற்றும் 3.20 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளது.

நெல் கொள்முதல் பருவம் அக்டோபரில் தொடங்கி செப்டம்பரில் நிறைவடைகிறது. கோதுமை கொள்முதல் பருவம் ஏப்ரலில் தொடங்கி மார்ச் மாதத்தில் நிறைவடைகிறது. இந்த வகையில் 2011–12 வேளாண் பருவ (ஜூலை–ஜூன்) உற்பத்தியில் 2.95 கோடி டன் நெல்லையும், 14.86 லட்சம் டன் கோதுமையையும் இந்திய உணவு கழகம் கொள்முதல் செய்துள்ளது.

சேமிப்பு கிடங்குகள்

ஜூன் மாதத்துடன் நிறைவடையும் வேளாண் பருவத்தில் 10.28 லட்சம் டன் நெல்லும், 8.83 கோடி டன் கோதுமையும் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது ஒரு சாதனை அளவாகும். எனினும் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் தானிய கிடங்குகளில் இடப்பற்றாக்குறையும் அதிகரித்துள்ளது. உணவு தானியங்களை திறந்தவெளிகளில் வைத்துப் பாதுகாக்க வேண்டியுள்ளது. போதுமான அளவு சேமிப்புக் கிடங்குகள் இல்லாததால் ஆண்டுதோறும் கணிசமான அளவு தானியங்கள் வீணாகின்றன.

## குன்னூரில் மழை ஏமாற்றியதால் வெயிலின் தாக்கம் அதிகரிப்பு தேயிலை மகசூல் பாதிப்பு

குன்னூர், ஏப்.11–

குன்னூரில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டு உள் ளது.

சுற்றுலா பயணிகள்

நீலகிரி மாவட்டம் மலை மாவட்டமாக இருப்பதால் கோடை வாச ஸ்தலமாக உள்ளது. இதனால் ஆண்டு தோறும் அதிகளவு சுற்றுலா பயணிகள் வருகை தருகின்ற னர். தற்போது கோடை காலங்களில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள நகரங் களில் சீதோஷ்ண நிலை மாறி வருகிறது.

குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக குன்னூர் பகுதியில் சீதோஷ்ண நிலை மாறி ஏப்ரல், மே மாதங்கள் கடும் வெயில் இருந்து வரு கிறது. கடந்த ஆண்டு அக்டோ பர், நவம்பர், டிசம்பர் மாதங் களில் வட கிழக்கு பருவமழை குன்னூர் பகுதியில் பரவலாக பெய்தது.அதன் பிறகு மழை இல்லாமல் பனியும், வறட்சி யுமான சீதோஷ்ண நிலை இருந்து வந்தது.

தேயிலை மகசூல் பாதிப்பு

தற்போது கத்திரி வெயில் என்று அழைக்கப்படும் அக்கினி நட்சத்திர வெயில் தொடங்குவதற்கு

முன்பாக வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளது. சமவெளி பகுதியை போன்று வெயில் இருப்பதால் பொது மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். பகல் வேளையில் கடும் வெயில் அடித்தாலும் ஒரு சில சமயங்களில் மாலை வேளையில் மழை வருவது போன்று மேக மூட்டம் ஏற்படுகிறது. ஆனால் சிறிது நேரம் கழித்து மேக மூட்டம் விலகி விடுகிறது.

குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பெரும் பாலும் தேயிலை விவசாயத்தை தான் சிறு விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர். மழை இல்லாமல் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் தேயிலை மகசூல் கடுமையாக பாதிக் கப்பட்டு உள்ளது.
சிவப்பு சிலந்தி தாக்குதல்
மேலும் வறட்சி ஏற்பட்டு உள்ளதால் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தியின் தாக்குதல் அதிகரித்து உள்ளது. இதனால் தேயிலை செடிகளின் இலைகள் காய்ந்து, உதிர்ந்து விடுகின்றன. நீர்ப்பாசன வசதிஇல்லாத இடங்களில் உள்ள தேயிலை செடிகள் கருகி உள்ளன.
கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மழை இருந்ததால் வறட்சியின் பாதிப்பு அதிகளவு இல்லாமல் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு மழை பொய்த் ததால் விவசாய பயிர்களும் பாதிக்கப்பட்டு உள்ளன. இதனால் குன்னூர் பகுதியில் மழைக்காக விவசாயிகளும், பொது மக்களும் ஏங்கி உள்ளனர்.

**கோவை மாவட்ட ரேஷன் கடைகளில் பருப்பு, உளுந்து ஒதுக்கீடு குறைவு: கோதுமை ஒதுக்கீடு அதிகம்**

கோவை,ஏப்.11--
கோவை மாவட்டத்தில் உள்ள ரேஷன் கடைகளில் பருப்பு, உளுந்து ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது. கோதுமை ஒதுக்கீடு அதிகரித்து உள்ளது.
$10^{1/2}$ லட்சம் ரேஷன் கார்டுகள்
கோவை மாவட்டத்தில் மொத்தம் 1327 ரேஷன் கடைகள் உள்ளன. அவற்றில் 10 லட்சத்து 60 ஆயிரம் ரேஷன் கார்டுகள் உள்ளன. இதில் சுமார் 7 ஆயிரத்து 137 கார்டுகள் எந்த பொருளும் வாங்காத கார்டுகள் ஆகும். இந்த நிலையில் மற்ற அனைத்து கார்டுகளுக்கும் சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, உளுந்து, சமையல் எண்ணை, மண்எண்ணை உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் வழங்கப்பட்டாலும், முற்றிலும் இலவசமாக அரிசி வழங்கப்படுகிறது.

இந்த இலவச அரிசியை பொறுத்தவரை ஒரு கார்டுக்கு குறைந்த பட்சம் 12 கிலோவும், அதிக பட்சமாக 20 கிலோவும் வழங்கப்படுகிறது. வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு மட்டும் அந்தியோதையா, அன்ன யோஜனா திட்டத்தின் கீழ், கார்டு ஒன்றுக்கு 35 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது.
ஒதுக்கீடு குறைவு
ரேஷன்கடைகளில் தற்போது புழுங்கல் அரிசி, பச்சரிசி, சர்க்கரை சமையல் எண்ணை, பருப்பு,

உளுந்து உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் வழங்கப்பட்டு வந்தாலும் உளுந்து, பருப்பு பொருட்களின் ஒதுக்கீடு என்பது கடைகளுக்கு குறைவாக உள்ளது. இதனால் முந்திக்கொள்பவர்களுக்கு உளுந்து, பருப்பு என்ற நிலை உள்ளது. இதனால் பொதுமக்கள் பலர் குறிப்பிட்ட அந்த பொருட்கள் வாங்க முடியாமல் ஏமாற்றம் அடைந்து திரும்பி செல்லும் நிலை உள்ளது. இது குறித்து அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:– ரேஷன் கடைகளில் அனைத்து பொருட்களும் பொதுமக்களுக்கு மாதம் முழுவதும் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. ரேஷன் கடைகளில் பற்றாக்குறையாக இருந்த கோதுமை ஒதுக்கீடு தற்போது அதிகரிக்கப்பட்டு உள்ளது. கோவை மாவட்டத்தில் மாதம் ஒன்றுக்கு 1550 டன் ஒதுக்கப்படுகிறது. இதனால் கோதுமை தற்போது மிச்சமாகவே உள்ளது. இது தவிர பருப்பு மாதம் ஒன்றுக்கு 698 குவிண்டாலும், உளுந்து 610 குவிண்டாலும் ஒதுக்கப்படுகிறது. இதில் பருப்பு ஒதுக்கீடு 53 சதவீதமாகவும், உளுந்து ஒதுக்கீ 73 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டு உள்ளது. இதனால் சிறிது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

கொலக்கம்பை பகுதிகளில்

## பூத்து குலுங்கும் கொன்றை மலர்கள்

கொலக்கம்பை, ஏப்.11–

கொலக்கம்பை பகுதியில் பூத்துக்குலுங்கும் கொன்றை மலர்கள் சுற்றுலா பயணிகள், பொதுமக்களை வெகுவாக கவர்கின்றன.

### விலை உயர்ந்த மரங்கள்

கொலக்கம்பை அருகே சாம்பூர், பழனியப்பா, பால் மராலீஸ் உள்ளிட்ட கிராமங் களை சுற்றி அடர்ந்த வனப் பகுதிகள் உள்ளது. இந்த வனப்பகுதியில் வேங்கை, தேக்கு, சந்தனம், கொன்றை மரம் உள்ளிட்ட பல வகை யான விலை உயர்ந்த மற்றும் அரிய வகை மரங்கள் உள்ளது.

கடவுள் முருகனின் விருப்பமான மலர்களில் ஒன்றான கொன்றை பூக்கள் தற்போது மரங்களில் பூக்கள் பூக்க தொடங்கி உள்ளன. ஆண்டு தோறும் மார்ச், ஏப்ரல் மாதங்கள் இதன் சீசன் காலங்கள் ஆகும். இந்த மரங்களில் பூக்கும் கொன்றை மலர்களை இந்து கடவுளான முருகனுக்கு வைத்து வழிபட்டு வருகின்றனர்.


### பூக்களாக காட்சி அளிக்கும் மரங்கள்

மேலும் மலையாள மக்க ளால் கொண்டாடப்படும் முக்கிய விழாக்களில் ஒன்றான சித்திரைக்கனிக்கு இந்த பூக்களை கொண்டு சிறப்பு பூஜைகளை செய்வார்கள். தற்போது இதன் சீசன் காலம் தொடங்கி உள்ளதால் கொலக்கம்பை பகுதியில் உள்ள மரங்களில் இலைகளே இல்லாமல் வெறும் பூக்களாக காட்சி அளிக்கிறது.

இதனால் மரங்கள் இலைகள் இன்றி மஞ்சள் நிறத்தில் காட்சியளிப்பதால் உள்ளூர் பகுதி மக்கள் மட்டுமல்லாமல் இப்பகுதிக்கு வரும் சுற்றுலா பயணிகளும் கண்டு களித்து செல்கிறார்கள். சிலர் பூக்களை பறித்துகொண்டு செல்கிறார் கள்.

### மலையாள மக்கள்

இன்னும் சித்திரைக்கனி பண்டிகைக்கு சில நாட்களே உள்ள நிலையில் கொலக் கம்பை பகுதியில் உள்ள மலையாள மக்களும் இதனை பறித்து சென்று வருகின்ற னர். மேலும் கொலக்கம்பை பகுதியில் உள்ள தேயிலை எஸ்டேட் பகுதிகளில் திரு விழா காலங்கள் என்பதாலும் இந்த பூக்களை இப்பகுதி மக்கள் பறித்து மாலையாக கோர்த்து இந்து கடவுள்களுக்கு அணிவித்து வருகின்றனர்.



கொலக்கம்பை பகுதியில் ஒரு மரத்தில் பூத்து குலுங்கும் கொன்றை மலர்களை படத்தில் காணலாம்.